## விக்கிரவாண்டி இடைத் தேர்தல்:

# சோழனூர் - சோழாம்பூண்டி ஊராட்சிகளில் அமைச்சர் இ.பெரியசாமி வாக்கு சேகரிப்பு!

### அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்றார்!

விக்கிரவாண்டி, ஜூலை 8 -

விக்கிரவாண்டி இடைத் தேர்தலை முன்னிட்டு சோழனூர், சோழாம் பூண்டி ஊராட்சி பகுதி களில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரிய சாமி மற்றும் உணவு மற் றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் வீதிவீதியாக சென்று பொது மக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி உத யசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

பெண்கள் உரிமைத் தொகை, இலவச பேருந்து பயணம், கல்லூரி மாணவி களுக்கு உதவித்தொகை வழங்கிய தமிழக முதல்வ ருக்கு என்றும் உறுதுணை யாக இருப்போம் என அமைச்சர்களிடம் சோழாம்பூண்டி கிராம மக் கள் உறுதி அளித்தனர்.

விக்கிரவாண்டி தொகு திக்குட்பட்ட சோழாம் பூண்டி, சோழனூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட அயினாம்பா ளையம், பெரியார்நகர், முத்தியால்பேட்டை, தென்னம்மாதேவி, பூத்த மேடு மாரியம்மன் கோவில் தெரு, நடுத்தெரு, காட்டு நாயக்கன் தெரு, ஆதிதிரா விடர் காலனி உட்பட பல கிராமங்களுக்கு நடந்து சென்று பொதுமக்களிடம் தமிழக அரசின் சாதனை திட்டங்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி வெற்றி வேட்பா ளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குள் சேகரித்தனர்.

அப்போதுபொதுமக்கள் மத்தியில் தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலா ளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசிய போது தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்களின் வழி யில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மக்களின் முதல்வர் மு.க.ஸ்டாலின் நல்லாட்சியில் ஜாதிமத இன வேறுபாடின்றி அனைத்து நலத்திட்டங் களும் அனைவருக்கும் கிடைத்து வருகிறது. குறிப் பாக தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் வளர்ச்சி அடைந்து வருகி றது. முதல்வரின் கிரா மப்புற சாலைகள் மேம் பாட்டுத் திட்டம் மூலம் கிராமப்புறங்களை நகரங்க ளுடன் இணைக்கும் சாலைகள் அமைக்கப்பட் டதால் கிராமப்புற மக்கள் எளிதாக அருகில் உள்ள நக ரங்களுக்கு செல்ல முடிகி றது. போக்குவரத்து வசதி கிராமப்புறங்களுக்கு கிடைப்பதோடு கிராமப்பு றங்களில் விளைவிக்கப் படும் விவசாயிகளின் விளைபொருட்கள் எளி தாக நகரங்களுக்கு கொண்டு சென்று விற் பனை செய்ய முடிகிறது என்றார்.

இங்கு என்னுடன் பிரச் சாரத்திற்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங் கல்துறை அமைச்சர் அர.சக்கர பாணியும் வந் துள்ளார். நீங்கள் தேர்தல் பிரச்சார ரத்தின்போது எங்க ளிடம் கோரிக்கை வைத்த பேருந்து நிறுத்த வசதி, பொதுக்கழிப்பறை வசதி, சாலை வசதிகள் தங்கு தடையின்றி குடிதண்ணீர் வசதிகிடைக்க உட்பட அனைத்தும் தேர்தல் முடிந்த பின்பு படிப்படி யாக நிறைவேற்றப்படும். பொதுமக்களின் முக்கிய மான கோரிக்கையான பகு திநேர நியாயவிலைக்கடை உடனடியாக அமைத்துக் கொடுக்கப்படும் என்றார். அப்போது அங்கு கூடியி ருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய் தனர்.

இந்த தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா தொகுதி மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர். அவருக்கு வாக் களித்து வெற்றி பெற செய் வதின் மூலம் உங்கள் கிரா மங்களுக்கு எண்ணற்ற நலத்திட்டங்கள் எளிதாக வந்தடையும் என்றார்.

தேர்தல் பிரச்சாரத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலா ளர் ஐ.பி.செந்தில்குமார், அவைத்தலைவர் வழக்கறி ஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்கிரேட் மேரி, பிலால் உசேன், பொருளாளர் சத்திய மூர்த்தி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட திமுக பொருளாளர் சாணார் பட்டி விஜயன், கோலிய னூர் மேற்கு ஒன்றிய செய லாளர் க.மும்மூர்த்தி, சோழாம்பூண்டி ஒன்றிய செயலாளர்கள் முருகே சன், தெய்வசிகாமணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே. அஸ் வின் பிரபாகரன், இளைஞ ரணி அமைப்பாளர் ம.கணேசன், துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன்,

திண்டுக்கல் மாநகர செயலாளரும், துணை மேயருமான ராஜப்பா, திண்டுக்கல் கிழக்கு மாவட் டத்தைச் சேர்ந்த ஒன்றிய திமுக செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளி மலை, ஆத்தூர் முருகேசன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலா ளர் மணி, நிலக்கோட்டை கரிகாலபாண்டியன், வத்த லக்குண்டு கனிக்குமார், அகரம் பேரூராட்சி மன் றத் தலைவர் நந்தகோ பால், துணைத்தலைவர் ஜெயபால், தாடிக்கொம்பு பேரூராட்சி துணைத் தலைவர் நாகப்பன், ஆத் தூர் ஒன்றிய தி.மு.க. துணைச் செயலாளர் ஆலம ரத்துப்பட்டி ராஜேந்திரன், சோழாம்பூண்டி ஊராட்சி மன்றத்தலைவர் கற்பக வள்ளி, சோழனூர் ஊராட்சி மன்றத்தலைவர் பாஸ்கரன், சோழாம் பூண்டி பகுதி திமுக நிர்வா கிகள் வைத்தியநாதன், சீனி வாசன், எடப்பாளையம் நாராயணராவ், ஆத்தூர் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் செல் வம், அரவிந்தன், ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் பாறைப்பட்டி முருகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ஆத்தூர் காங்கேயன், ரெட்டியார் சத்திரம் கே.புதுக் கோட்டை ரமேஷ், ஆத் தூர் கிழக்கு ஒன்றிய இளை ஞரணி அமைப்பாளர் ராஜ கணேஷ், ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, செல்வி காங் கேயன், வண்ணம்பட்டி காணிக்கைசாமி, ஊராட்சி மன்ற தலைவர்கள் தொப் பம்பட்டி கருப்பையா, போடிக்காமன்வாடி நாக லட்சுமி சதீஸ்குமார், சீவல் சரகு ராணிராஜேந்திரன், ஆத்தூர் ஐ.ஜம்ரூத்பேகம், சின்னாளபட்டி பேரூர்க ழக பொருளாளர் எஸ். ஆர்.முருகன், மணலூர் ஊராட்சி மன்ற துணைத்த லைவர் சுருளிராஜன், பித்த ளைப்பட்டி கோபால், அரசு ஒப்பந்தகாரர்கள் பஞ்சம்பட்டி ஜீசஸ் அகஸ் டின், மெல்வின், ஆலமரத் துப்பட்டி விக்னேஷ், மாவட்ட பிரதிநிதி ஆரிய நல்லூர் தங்கவேல் மற்றும் கூட்டணி கட்சி நிர்வா கிகள், இளைஞரணியினர், மகளிரணியினர், திமுக சார்பு அணியினர் தீவிர மாக தேர்தல் பிரச்சாரம் செய்து வேட்பாளர் அன் னியூர் சிவா அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

பிரச்சாரத்தின்போது துண்டு பிரசுரங்களை வழங்கிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரிய சாமி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அர. சக்கரபாணியிடம் சோழ னூர், சோழாம்பூண்டி கிராம மக்கள் தங்கள் வாக்கு உதயசூரியனுக்கே என உறுதி அளித்தனர்.

# விக்கிரவாண்டி தொகுதியில் மக்கா போன் மூலம் பிரச்சாரம்!

### திப்பம்பட்டி ஆறுச்சாமி - கோழிக்கடை கணேசன் பங்கேற்பு!

விக்கிரவாண்டி, ஜூலை 8 -

விக்கிரவாண்டி தொகு தியில் போட்டியிடும் தி. மு.க. வேட்பாளர் அன்னி யூர் சிவாவிற்கு உதயசூரி யன் சின்னத்தில் வாக்கு களை கேட்டு தி.மு.க. ஆதி திராவிட குழு மாநில இணைச்செயலாளர், தலை மைக் கழகப் பேச்சாளர் திப்பம் பட்டி ஆறுச்சாமி மக்கா போன் பிரச்சாரம் செய்தார்.

முன்னாள் நகரச் செய லாளரும் தலைமை செயற் குழு உறுப்பினருமான கோழிக் கடை கணேசன், பல்லடம் ரோடு மோகன் பூசாரிப்பட்டி பிரசாந்த் உள்பட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.


விக்கிரவாண்டி பேரூர் கழகம் காணை மேற்கு ஒன்றியம் உள்பட பல பகு திகளில் பிரச்சாரம் செய் தனர்.

பிரச்சாரம் செய்த இடங்களில் எல்லாம் தலை வர் தளபதியார் அரசின் சாதனைகளுக்கு மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு உத யசூரியனுக்கு வாக்களிக்க வேண்டும் என வேண்டு கோள் விடுத்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொள்ளாச்சி எஸ். ராஜு

### ஜூலை 8 (2014)



தனது இளமை காலந்தொட்டே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பொள்ளாச்சி பகுதியில் பணியாற்றியவர்

1972ஆம் ஆண்டு முதல் 2007 ஆண்டு வரை தொடர்ந்து பொள்ளாச்சி நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது கொங்கு மண்டலத்தில் கழகத்தை வளர்த்திட பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

பொள்ளாச்சி நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர்மன்றத் தலைவராகவும் பொறுப்பு வகித்ததுடன், 1996ஆம் ஆண்டு பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

1959ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## விக்கிரவாண்டியில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. வாக்கு சேகரிப்பு!

விழுப்புரம், ஜூலை 8-

விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் மேல் கொந்தை ஊராட்சியில் ஆதிதிராவி டர் நலக்குழு சார்பில் மாநில ஆதிதிராவிடர் நலக் குழு செயலாளரும், பூவிருந் தவல்லி சட்டமன்ற உறுப்பி னருமான ஆ.கிருஷ்ணசாமி வீடுவீடாகச் சென்று உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர் தல் வரும் 10-ஆம் தேதி நடைபெறுகிறது. இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கி ரவாண்டி மத்திய ஒன்றியத் தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க. வினர் தீவிர வாக்கு சேகரிப் பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாநில ஆதிதிராவி டர் நலக்குழு செயலாள ரும், பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி உள் ளிட்ட நிர்வாகிகள் விக்கிர வாண்டி மத்திய ஒன்றியம் மேல் கொந்தை ஊராட்சி யில் வீடு, வீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து முதலமைச்சரின் சாதனை கள் அடங்கிய துண்டு பிரசு ரங்களை வழங்கி உதயசூரி யன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.


## உதட்டில் ஒற்றுமைச் சாயம் - உள்ளத்தில் வேற்றுமை ஆழம்;

# பிரதமர் நரேந்திர மோடியின் முரண்பட்ட அணுகுமுறை!

இந்தியாவின் 18 வது நாடாளுமன்றத் தேர்தலுக்கு, எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காத சூழ்நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) சார்பில் நரேந்திரமோடி மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த ஜூன் மாதம் 9ம் தேதி பிரதம அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். அவரைத் தொடர்ந்து ஐக்கிய ஜனதாத்தளக் கட்சியை சார்ந்தவர்க ளும், தெலுங்கு தேச கட்சியைச் சார்ந்தவர்களும் அமைச் சர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். அங்கீகரிக் கப்பட்ட எதிர்க்கட்சி தலைவராக ராகுல்காந்தி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். கடந்த 2014ஆம் ஆண் டும், 2019 ஆம் ஆண்டும் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் பாரதிய ஜனதாக் கட்சி தனிப் பெரும்பான்மை பெற்றமையால், பிரதமர் நரேந்திரமோடி பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பாக தனித்து ஆட்சியமைக்க முடிந்தது.

ஆனால் 18வது நாடாளுமன்றத் தேர்தலுக்கான இந்தத் தேர்தலில், மாநில கட்சிகளான தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதாத்தளம் ஆகிய கட்சிகளுடன் கூட்டணி வைத்துதான் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) சார்பில் ஆட்சிய மைக்க முடிந்தது என்ற நிலையில், பிரதமர் நரேந்திர மோடியின் அமைச்சரவை முடிவுகள் இந்த இரண்டு மாநி லக் கட்சிகளின் ஒப்புதலோடுதான் எடுக்க இயலும். அது மட் டுமல்ல, இந்தியா கூட்டணியின் (INDIA) சார்பாக கணிச மான எண்ணிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதால் ராகுல்காந்தி அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சி தலைவராக ஆக்கப்பட்டுள்ளார்கள். அவருக்கு ஒரு கேபினேட் அமைச்சருக்கு உண்டான தகுதியும், பல் வேறு உரிமைகளும் சட்டப்படி வந்து சேர்கிறது.

தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், எதிர்க்கட்சியான இந்தியா கூட்டணிக் கட்சிகளின் எண்ணிக்கைக்கும் மிகக் குறைந்த அளவே வேறுபாடுயிருக்கிறது. நாடாளுமன்றத் தில் ஆளும் கட்சியின் எண்ணிக்கை பலத்திருக்கும், எதிர்க் கட்சியின் எண்ணிக்கை பலத்திற்கும் மிகக் குறைந்த அள வில் ஏற்றத்தாழ்வு உள்ள சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் முன்னெச்சரிக்கையுடன் இராஷ்ட் ரிய சுயம் சேவக் சங் (RSS) தலைவர் மோகன் பகவாத் "எதிர்க்கட்சிகள் எல்லாம் எதிரி கட்சிகள் அல்ல" எனவே அர சியல் சட்ட அடிப்படையிலான அணுகுமுறைகளைப் பின் பற்றி ஆட்சி யினை இயக்கி ஜனநாயகத்தைப் பாதுகாப் போம் என்று ஒரு அறிக்கையில் குறிப்பிட் டுள்ளார். 18 ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் இந்திய அரசியல் சட் டத்தின் (CCConstitution of India) மேல், தான் கொண்டிருந்த மதிப்பீடுகளை மாற்றிக் கொள் ளும் பாவனையில், தேசிய ஜன நாயகக் கூட்டணியின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் கூட்டத் தில் தன்னை தலைவராக தேர்ந்தெடுக்கும் அந்தக் காலகட்டத்தில் இந்திய அரசியல் சட்டத்தை தலைவணங்கி ஏற்றுக் கொள்வதைபோன்று எடுக்கப்பட்ட புகைப்படங்களை பிரதமர் நரேந்திரமோடி வெளியிட்டார்.



**பொன். முத்துராமலிங்கம்**
*முன்னாள் அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்*

இவ்வளவு நாடகபாணி அரசியலுக்குப் பின்னரும் பிரத மர் நரேந்திரமோடி இந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் மக் கள் வழங்கிய எச்சரிக்கைத் தீர்ப்பை சரியாகப் புரிந்து கொண்டு செயல்படுத்துகிறாரா? என்பது அவர் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே, அவருடைய தொடர் அரசியல் நடவடிக் கைகள், மக்களின் ஐயப்பாட்டையும், அச்சத்தையும் அதிகரித் துள்ளது என்பதுதான் இன்றைய ஒன்றிய அரசியலின் உண்மை நிலையாகும்! நாடாளுமன்ற மரபுகளின்படி துணைச் சபாநாயகர் பொறுப்பு என்பது எதிர்க் கட்சியிலே உள்ள மூத்த உறுப்பினருக்கு வழங்கப்படுவது நாடாளுமன் றம் தொடர்ந்து பின்பற்றிவரும் மரபாகும். ஆனால், அந்த மரபை மதித்து இம்முறையும் நாடாளுமன்றத் துணைச் சபா நாயகர் பொறுப்பு எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுக்கு வழங் கப்படவில்லை. இதற்கிடையில் கடந்த 17 வது நாடாளுமன்ற தொடரிலும், துணைச் சபாநாயகர் பொறுப்பு எதிகட்சியின ருக்கு வழங்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிட வேண் டிய தொடர்புடைய செய்தியாகும்.

எனவே நாடாளுமன்றத் தொடரை, ஜனநாயக வழிமு றைகளைப் பின்பற்றி, எதிர்க்கட்சியினரின் கருத்துக்கள் ஏற்புடையதாக இருப்பின், அந்தக் கருத்துக்களையும் உள் வாங்கிக்கொண்டு முடிவுகளை மேற்கொள்வேன் என்ற அவரது முந்தைய பேச்சுகளும், வாக்குறுதிகளும் இன் றைய நடப்பு நாடாளுமன்ற நடவடிக்கைகளில் செயல் வடி வம் பெறவில்லை என்பதே உண்மையான நிலையாகும். இன்று நிலவிடும் இந்தச் சூழ்நிலைகளையும், பிரதமர் நரேந்திரமோடியின் முரண்பட்ட செயல்பாடுகளையும் இந் திய வாக்காளப் பெருமக்களுக்கு விளக்கிவிட வேண்டும் என்கின்ற நோக்கின் அடிப்படையில் முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவரும், தலைவர் ராகுல்காந்தியின் தாயாருமான காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான அன்னை சோனியாகாந்தி அவர்கள் 29.6.2024 ஆம் நாள் "இந்து" ஆங்கில நாளேட்டில் "ஒரு மித்து முடிவெடுப்போம் என்பதோ உபதேசம், முரண்பாடுகளை உருவாக்குவதோ அன்றாட நடை முறை" (Preaching consensus provoking confrontation) என்ற தலைப்பில் சோனியாகாந்தி அம்மையார் பொருள் பொதிந்த கட்டுரை ஒன்றை தீட்டியுள்ளார்கள்.

2024 ஜூன் 4ம் தேதி அன்று 18 வது நாடாளுமன்றத் தேர்தலுக்கான மக்களின் தீர்ப்பு குறித்து, அன்னை சோனி யாகாந்தி ஓர் அருமையான, ஆம்! தெளிவான விளக் கத்தை அவரது கட்டுரையில் விவரிக்கிறார்கள். மக்கள் வழங்கியுள்ள இந்த வரலாற்றுத் தீர்ப்பு என்பது தன்னை கடவுளின் அவதாரம் என்று பிரகடனப்படுத்திக் கொண்ட பிரதமர் நரேந்திரமோடிக்கு தனித்தும், அரசியல் அடிப்ப டையிலும், தார்மீக அடிப்படையிலும் வழங்கப்பட்ட படுதோல்வியாகும். மக்களின் இந்தத் தீர்ப்பு பிரதமர்மோடியின் நாடகப்பாணி அரசியலும், பிரித்தாலும் பிரச்சார முறையும், வெறுப்புப் பேச்சுகளும், எதேச்சதிகார ஆட்சிமுறையும் இந்திய மக்களுக்கு ஏற்புடையதல்ல என் பது மட்டுமல்ல, அதனை முற்றிலும் நிராகரிக்கிறோம் என் பதற்கான மக்கள் தீர்ப்புதான் இந்த 18 வது நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளாகும்.

(On June 4, 2024, the verdict of our country's elec torate was delivered clearly and resoundingly. It sig nalled a personal, political, and moral defeat for a Prime Minister who had awarded himself a divine status during the campaign. The verdict negated not only such pretensions, but it was also an unequivocal rejection of the politics of divisiveness, discord and hatred, a repudi ation of both the substance and style of governance of Mr. Narendra Modi - The Hindu, Date June 29,2024)

மக்களின் இந்தத்தீர்ப்பிற்குப் பின்னரும், பிரதமர் நரேந் திரமோடி தன்னுடைய நடைமுறைகளையும், அணுகுமு றைகளையும் திருத்திக்கொள்ளவில்லை. எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள ராகுல்காந்தியை களங் கப்படுத்த வேண்டுமென்பதற்காக 1975 ஆம் ஆண்டில் மறைந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அமல்படுத் திய அவசரகால நிலை பற்றி அவசியமின்றி வலிந்து விமர் சிக்கிறார். 1975 ஆம் ஆண்டு அவசரகால நிலைமை பிரக டனப்படுத்தப்பட்ட பொழுது, அதனை எதிர்த்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அவசரகால நிலைமை அமல்படுத்தியதை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றி, ஜன நாயகத்தைப் பாதுகாக்கும் அந்த நடவடிக்கையின் காரண மாக கழக ஆட்சியையே விலையாகக் கொடுக்க வேண் டிய நிலை உருவாகியது.

அதுமட்டுமல்ல, இதனைத் தொடர்ந்து சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற லட்சக்கணக்கான மக் கள் குழுமிய பொதுக்கூட்டத்தில் இந்திராகாந்தி அம்மை யார் அவர்கள், அவசரகால நிலைமை அமலில் இருந்த காலகட்டத்தில், நடைபெற்ற வரம்பு மீறிய அரசின் நடவடிக் கைகளுக்கு மக்கள் மத்தியில் பகிரங்கமாக மன்னிப்பு கேட் டார். அதற்குப் பின்னர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் "நேருவின் மகளே வருக நிலையான ஆட்சி தருக" என் றார். இதனைத் தொடர்ந்து இந் திராகாந்தி அவர்கள் மீண்டும் 1980 ஆம் ஆண்டு பிரதமராக மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டார் என்பது வரலாறு. பிர தமர் மோடி நாடாளு மன்றத் தில் கூறியது பாதிவரலாறுதான் மீதியை வேண்டுமென்றே விட் டுவிட்டார் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

மேலும், கடந்த 17 ஆவது நாடாளுமன்றத்தில், 146 நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்து விட்டு, நிறைவேற்றப்பட்ட மூன்று குற்றவியல் சட்டங் களை, புதிய 18 வது நாடாளுமன்றம் தொடங்கிய நிலை யில், இந்த நாடாளுமன்றத்தின் கருத்துப்பறிமாற்றங் களுக்கு வாய்ப்பளிக்காமல், நாடு தழுவிய எதிர்ப்பிற்கு மத்தியில் இந்த ஆண்டு ஜூலை 1ஆம் தேதி முதல் அமல் செய்யப்படும் என்று அறிவிக்கிறார். அதுமட்டுமல்ல மருத் துவக் கல்விக்கான தேசிய தகுதி நுழைவுத் தேர்வு (National Eligibility Entrance Test) இந்த ஆண்டு நடைபெற்ற பொழுது உருவாக்கியிருக்கும் முறைகேடுகளும், குளறுபடிகளும் முன்எப்பொழுதும் இந்த அளவிற்கு நடை பெற்றதாகத் தெரியவில்லை. இந்த அவலங்களால் பலலட் சக்கணக்கான இளைஞர்களும், இளம் பெண்களும் தங்க ளின் மருத்துவப் படிப்புக் கனவுகள் நிறைவேறாமையால், நெஞ்சங்களைப் பதற வைக்கும் சோகமான முடிவுகளை ஆம்! வார்த்தைகளால் வர்ணிக்கவியலாத முடிவுகளை எடுத்து தங்களை அழித்துக் கொண்டனர்.

இத்தகைய இளம்தளிர்களின் சோக முடிவுகளால், நிலைகுலைந்து நிற்கதியாக நடுத்தெருக்களுக்கு வந்துவிட்ட குடும்பங்களின் எண்ணிக்கை, எண்ணில் அடங்காது என்கின்ற சோக சூழ்நிலைகள்தான் பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வரவேற்புக் கட்டியம் கூறுகிறது. பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி காலத்தில், எதிர்க்கட்சி ஆட்சியி லுள்ள மாநிலங்களின் பல்கலைக்கழகங்களில், ஆளுநர் கள் வரன்முறையின்றி தலையிட்டு, ஆணைகளைப் பிறப் பித்து பல்கலைக்கழகங்களின் நிர்வாகங்களைக், கல்வியின் தரமும் சீர்குலைந்து சின்னாபின்னமாகி கிடப் பதை பிரதமர் நரேந்திரமோடி பரிசீலனை செம்மைப்படுத்த எந்த நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மோடி "புதிய மொந்தையில் பழைய கள்" என்ற சொலவடைக்கு ஒப்ப, பழைய இந்துத்துவப் பாதையைதான் தொடர்ந்து, பின்பற்றி வருகிறார். மாற்றமோ மறுமலர்ச்சியோயின்றி ஆட்சியை தொடர முயற்சிக்கிறார் என்பதற்கான தீர்க்கமான அறிகுறிதான் தற்பொழுது தெரிகிறது. இந்திய அரசியல் சட்டத்தை தன் முதுகில் ஒற்றிக்கொண்டு அதன் படி நடப்பேன் என்றவர், தொடக்கத்திலேயே திசைமாறி செல்வதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்.

ஆனால், முன்பைவிட, பிரதமர் நரேந்திரமோடியின் ஆட்சியை மக்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறார்கள். பிரதமர் நரேந்திரமோடி மக்களை ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டால், கரைசேரவியலாத கப்பலாக, மோடியின் ஆட்சி, நடுக்கடலிலேயே பயணத்தை முடித்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலைதான் உருவாகும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

வாழ்க ஜனநாயகம் - வீழ்க பாசிசம்.



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட பொன்னங்குப்பம் ஊராட்சிக்கான 203 & 204 தேர்தல் பணிமனையில் கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, கழக தேர்தல் பணிக்குழு துணைச் செயலாளர் ஆஸ்டின், சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி ஆகியோர் தேர்தல் பணி குறித்து ஆய்வு மேற்கொண்டனர். உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணி களின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் பலர் உள்ளனர்.